**<u>முதன்மை சார்பு நீதிமன்றம், செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்</u>**

**<u>M.C.O.P.No.29/2024</u>**

| | | |
|---|---|---|
| மனுதாரர் தரப்பு சாட்சி | .. | 2 |
| பெயர் | .. | வேலன் |
| தகப்பனார் / கணவர் | .. | சௌரிராயன் |
| வயது | .. | 54 |
| தொழில் | .. | |
| கிராமம் | .. | மோரணம் |
| தாலுக்கா | .. | செய்யாறு |

2026 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 04 ஆம் நாள் புதன்கிழமை திரு.நா.சுரேஷ், எம்.எல்., முதன்மை சார்பு நீதிபதி, செய்யாறு அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச்சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதி செய்யப்படுகிறது.

**<u>முதல் விசாரணை:</u>**

வழக்கில் மனுதாரர் தரப்பு சாட்சி 2 ஆவேன். எனது சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விவரங்கள் என்னால் சொல்லப்பட்டது. நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையது தான். ஆவணங்களை தாக்கல் இல்லை.

**<u>குறுக்கு விசாரணை</u>**

விபத்தில் இறந்த நபர் பாலு என்பவர் எனது ஊர்காரர், என் சொந்தம் கிடையாது. விபத்து சம்பந்தமாக நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. எதிர் திசையில் வந்த கார் மோதி விபத்து ஏற்பட்டது, அப்போது நான் அங்கு மாடு கட்டிக்கொண்டு இருந்தேன். விபத்து நடந்த 10 நிமிடம் கழித்து சம்பவ இடத்திற்கு சென்றேன், அப்போது

என்னுடன் ஊர்காரர்களும் வந்தார்கள். நான் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றாலும் இறந்த நபர் என் ஊர்காரர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

Taken down before by me in open Court read over / interpreted to the witness and acknowledged by him / her to be correct.

Sd/- N.Suresh
**Principal Subordinate Judge,**
**Cheyyar.**